கீழ்பென்னாத்தூரில் ரூ.3.51 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய பஸ் ஸ்டாண்டை துணை சபாநாயகர் பிச்சாண்டி திறந்து வைத்தார்.

கீழ்பென்னாத்தூரில் புதிய பஸ் ஸ்டாண்ட்

வீடியோ கான்பரன்சிங்கில் முதல்வர் ஸ்டாலின் திறந்தார்

■ கீழ்பென்னாத்தூர், மார்ச் 14-

கீழ்பென்னாத்தூர் பகுதியில் பஸ் ஸ்டாண்ட் வசதி இல்லாததால் மக்கள் சிரமப்படுவது குறித்து துணை சபாநாயகரும் கீழ்பென்னாத்தூர் எம்எல்ஏவுமான பிச்சாண்டி சட்டசபையில் கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின் கீழ் கீழ்பென்னாத்தூர் டவுன் சந்தைமேடு பகுதியில், முதல் கட்டமாக 3 கோடியே 51 லட்சம் ரூபாய் மதிப்பில் நவீன வசதிகளுடன் புதிய பஸ் ஸ்டாண்ட் கட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து, புதியபஸ் ஸ்டாண்டை முதல்வர் ஸ்டாலின் நேற்று வீடியோ கான்பரன்சிங் வாயிலாக திறந்து வைத்தார். தொடர்ந்து, கீழ்பென்னாத்தூர் பஸ் ஸ்டாண்டில் நடந்த நிகழ்ச்சியில், துணை சபாநாயகர் பிச்சாண்டி குத்துவிளக்கேற்றி, ரிப்பன் வெட்டி தொடங்கி வைத்தார். மேலும் திமுக நிர்வாகிகளும், ஊர் மக்களும் பட்டாசு வெடித்தும், இனிப்பு வழங்கியும் கொண்டாடினர்.

விழாவில் திமுக கீழ்பென்னாத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆராமுதி ஆறுமுகம், டவுன் பஞ். சேர்மன் சரவணன், நகர செயலாளர் அன்பு, முன்னாள் டவுன் பஞ். சேர்மன் பன்னீர்செல்வம், துணை சேர்மன் தமிழரசி கந்தராமூர்த்தி, செயல் அலுவலர் ராதாகிருஷ்ணன், இளநிலை உதவியாளர் வெற்றிவேல், கணினி இயக்குனர் சுரேஷ், கவுன்சிலர்கள் பாக்யராஜ், ஜீவா மனோகரன், அம்பிகா ராமதாஸ், கனகா பார்த்திபன், கவிதா ஏழுமலை மற்றும் திமுக நிர்வாகிகள், டவுன் பஞ். அலுவலக ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

பெண்ணுக்கு சமுதாய பொறுப்பு இருந்தால் குடும்பம் நன்றாக இருக்கும்

ஆரணி ஆர்டிஓ சிவா பேச்சு

■ ஆரணி, மார்ச் 14-

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப்பணிகள் ஆரணி, மேற்கு ஆரணி யூனியன் சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நேற்று நடந்தது.

மாவட்ட திட்ட அலுவலர் சரண்யா தலைமை வகித்தார். திமுக ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், துரைமாமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் மலர் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக ஆர்டிஓ சிவா, முன்னாள் எம்எல்ஏ சிவானந்தம், நகராட்சி சேர்மன் மணி ஆகியோர் கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். தொடர்ந்து, ஆர்டிஓ சிவா 200 கர்ப்பிணி பெண்களுக்கு புடவை உட்பட மங்கல பொருட்கள் வழங்கி பேசிய தாவது: ஒரு பெண் திருமணம் செய்து தாயான பின்னர்தான் பிறந்த பயனை அடைகிறார்.

தமிழக அரசு கருவில் உள்ள குழந்தைக்கு சத்தான உணவு அளித்து, பாதுகாப்புடன் பிறக்க வழி செய்துள்ளது. ஆரோக்கியமான முறையில் குழந்தை பிறக்க கர்ப்பிணி தாய்மார்கள் மாதந்தோறும் மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும். ஒவ்வொரு பெண்ணுக்கும் சமுதாய பொறுப்பு இருந்தால் குடும்பம் நன்றாக இருக்கும். இவ்வாறு பேசினார்.

நிகழ்ச்சியில் திமுக மாவட்ட துணை செயலாளர் ரவி, மாவட்ட பொருளாளர் தட்சணாமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் சுந்தர், மோகன், ராஜ்குமார், நகர பொறுப்பாளர் மணிமாறன், கண்ணமங்கலம் டவுன் பஞ். சேர்மன் மகாலட்சுமி கோவர்த்தனன், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் சதீஷ், ராஜ்குமார், மேற்பார்வையாளர்கள் பானுமதி, சீதா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

ஆரணி, மேற்குஆரணி ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் சார்பில் கர்ப்பிணிகளுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி நடந்தது.

நேற்றைய வெயில் அளவு (மதியம்வரை)
திருவண்ணாமலை - 98

ஆரணி டவுன் சைதாப்பேட்டை ஜங்ஷன் அருகில் உள்ள முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலை அருகில் மின்விளக்கு எரியாததால் இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

ஜொலிக்குமா?

• கருணாநிதி சிலையை மறந்த ஆரணி திமுகவினர்
• மின்விளக்கு எரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

■ ஆரணி, மார்ச் 14-

ஆரணி தொகுதி திமுக சார்பில், சைதாப்பேட்டை ஜங்ஷன் அருகில் மறைந்த திமுக தலைவரும், முன்னாள் முதல்வருமான கருணாநிதி உருவ வெண்கல சிலை அமைக்கப்பட்டது.

இந்த சிலையை, சில மாதங்களுக்கு முன்னர் துணை முதல்வர் உதயநிதி, அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் திறந்து வைத்தார். இதையடுத்து தினமும் இரவு 30 நாட்களுக்கு திமுகவினர் சிலை அருகில் மக்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

ஆனால், அதன் பின்னர் கருணாநிதி சிலையை திமுகவினர் மறந்துவிட்டதாக கூறப்படுகிறது. தினமும் இரவு சிலை அருகில் மின்விளக்கு எரிகிறதா இல்லையா என்று யாரும் கவனித்ததாக தெரிய வில்லை.

இப்போது, அந்த இடத்தில் மின்விளக்கு எரியவில்லை. மேலும், அப்பகுதியில் சாலையின் நடுவில் உள்ள மின் விளக்குகளும் எரியாததால், கருணாநிதி சிலை உள்ள இடம் இரவு நேரத்தில் கும்மிருட்டாக காட்சியளிக்கிறது.

மேலும், போளூர் சாலையில் இருந்து ஆரணி நோக்கி வருபவர்களுக்கு இரவு நேரத்தில் இந்த இடத்தில் சிலை இருப்பது தெரிவதில்லை. இதனால், திமுக தொண்டர்கள் மனவேதனை அடைந்துள்ளனர். முன்னாள் முதல்வர் கருணாநிதி சிலையை திமுக நிர்வாகிகள் தினமும் பராமரிக்க வேண்டும் என்று தொண்டர்கள் எதிர்பார்க்கின்றனர்.

வந்தவாசி -காஞ்சிபுரம் 4 வழிச்சாலை தர கட்டுப்பாடு பொறியாளர் ஆய்வு

■ வந்தவாசி, மார்ச் 14-

வந்தவாசி- காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, வீரம்பாக்கம் புதூரில் இருந்து வந்தவாசி மலை அடிவாரம் வரை உள்ள கிட்டத்தட்ட 6 கி.மீ. தூரம் இருவழிச் சாலையை 4 வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி 40 கோடி ரூபாயில் நடந்தது வருகிறது.

இந்நிலையில், இந்தப் பணிகளின் தரம், உறுதித் தன்மை ஆகியவை குறித்து திருவண்ணாமலை தர கட்டுப்பாடு கோட்ட பொறியாளர் சரவணன் நேற்று ஆய்வு செய்தார். அப்போது பணிகளை விரைந்து முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது சென்யாறு கோட்ட பொறியாளர் சந்திரன், வந்தவாசி உட்கோட்ட பொறியாளர் ராஜேந்திரன், செய்யாறு தர கட்டுப்பாடு உதவி கோட்ட பொறியாளர் இன்பநாதன், வந்தவாசி உதவி பொறியாளர் கருணாகரன் ஆகியோர் உடனிருந்தனர்.

பாம்பு கடித்த நிலையிலும் விடவில்லை 10ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவன்

■ வெம்பாக்கம், மார்ச் 14-

வெம்பாக்கம் தாலுகா, பகவந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்தவர் ஆதிமூலம். இவரின் மகன் பெனின் (14). இவர், மேநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்து வருகிறார்.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் நடந்துவரும் நிலையில், காலையில் மாணவன் குளிப்பதற்காக தனது கிராமத்தில் உள்ள கிணற்றுக்கு சென்றுள்ளார். அப்போது கிணற்றின் அருகே உள்ள பாம்பு அவரை கடித்து விட்டது. உடனடியாக அவரை அக்கம் பக்கத்தினர் மற்றும் உறவினர்கள் மீட்டு, சின்ன ஏழாச்சேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி சிகிச்சை அளித்தனர். பின்னர், மேல் சிகிச்சைக்காக காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

இதுகுறித்து கேள்விப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர் தயாளன் உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்து சென்று மாணவனிடம் நலம் விசாரித்து பெற்றோரிடமும் டாக்டரிடமும் மாணவனின் உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். பின்னர், பெற்றோர் மற்றும் டாக்டரின் அறிவுரைப்படி மாணவன் பொதுத்தேர்வு எழுத பள்ளிக்கு விரைந்து வந்தார் பின்னர் தேர்வு எழுதி முடித்துவிட்டு வரும் 16ம் தேதிதான் தேர்வு என்பதால், மாணவனை மீண்டும் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

பாம்பு கடித்த நிலையிலும், மனஉறுதியுடன் 10ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவனை பள்ளி தலைமைஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள், கிராம மக்கள் பாராட்டி வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தானிப்பாடி கிளைக்கு பொன்.தனுசு என்பவர் 5 சென்ட் இடம், தான செட்டில்மெண்ட் செய்து மண்டல இணை பதிவாளர் பார்த்தீபனிடம் வழங்கினார். அருகில், கூட்டுறவு வங்கி அதிகாரிகள்.

தானிப்பாடி கூட்டுறவு வங்கிக்கு 5 சென்ட் இடம் தானம்

■ திருவண்ணாமலை, மார்ச் 14-

திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தானிப்பாடி கிளைக்கு பொன்.தனுசு என்பவர் 5 சென்ட் இடம் தானசெட்டில்மெண்ட் செய்து மண்டல இணை பதிவாளர் பார்த்தீபன் மற்றும் இணை பதிவாளர் மேலாண் இயக்குனர் அமிர்தா ஆகியோரிடம் வழங்கினார்.

நிகழ்ச்சியில் துணை பதிவாளர்கள் சந்திரசேகரன், வினோத், கோவிந்தராஜன், பிரான்சிஸ்சகாய ஆரோக்கியமேரி மற்றும் வங்கியின் பொது மேலாளர் நாராயணன் மற்றும் கூட்டுறவு சார்பதிவாளர்கள், வங்கி அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தெள்ளார் யூனியன் அலுவலகத்தில் கலைஞரின் கனவு இல்ல ஆணை

■ வந்தவாசி, மார்ச் 14-

தெள்ளார் யூனியன் அலுவலகத்தில் கலைஞரின் கனவு இல்ல திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுக்கான பயனாளிகளுக்கு வேலை உத்தரவு வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடத்தது. பிடிஓ பாலமுருகன் தலைமை வகித்தார். பிடிஓ குப்புசாமி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக வந்தவாசி எம்எல்ஏ அம்பேத்குமார் கலந்து கொண்டு, தெள்ளார் யூனியனுக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்டத்தில் வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார்.

தொடர்ந்து தெள்ளார் மற்றும் வந்தவாசி யூனியனுக்கு உட்பட்ட 200 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வந்தவாசி – திண்டிவனம் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடந்த சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சீர் வரிசைகளை வழங்கினார்.

இதில் பிடிஓகள் ஆனந்த், சத்யா, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் கண்ணகி, வட்டார மருத்துவ அலுவலர் ஹித்தேன் டி ஷா, பொது மருத்துவர் ராஜேஸ்வரி, திமுக ஒன்றிய செயலாளர்கள் ராதா, இளங்கோவன், சுந்தரேசன், தெள்ளார் முன்னாள் பஞ். தலைவர் ஆனந்த், நிர்வாகிகள் ராமு, கோபிநாத், வினாயகமூர்த்தி உட்பட அரசு அதிகாரிகள், கலந்து கொண்டனர். மேனேஜர் கவஸ் நன்றி கூறினார்.

கூட்டுறவே நாட்டுயர்வு ! கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!!
பதிவு தேதி : 24.04.1957 துவக்க தேதி: 19.07.1957

எச்.எச்.130 ஆரணி தாலுக்கா அரசினர் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கம்

பொதுப் பேரவைக்கூட்ட அறிவிப்பு

இடம் : அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கண்ணமங்கலம்
கூட்டம் நடைபெறும் நாள் : 23.03.2026 மாலை : 3 மணி

அன்புடையீர் வணக்கம் !

எச்.எச்.130 ஆரணி தாலுக்கா அரசினர் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத்தின் ஒட்டு மொத்த சங்க சிறப்பு துணை விதி திருத்தம் (En-bloc Special Bylaw Amendment) செய்யவும் கீழ்காணும் பொருள்கள் குறித்து பரிசீலனை செய்யவும் பொது பேரவை கூட்டம் நடைபெற உள்ளது. சங்கத்தின் அனைத்து **(அ)** உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கூட்டத்தில் ஆலோசிக்கப்படவுள்ள பொருள்கள்

1. ஒட்டுமொத்த சங்க சிறப்பு துணைவிதி திருத்தம் (En-bloc Special Bylaw Amendment) செய்தல்.
2. செயலாட்சியாரல் கொண்டு வரப்படும் இதர தீர்மானங்கள்.

K.லதா செயலாளர் (பொறுப்பு)
இரா.சுகன்யா கூட்டுறவு சார்பதிவாளர்/ செயலாட்சியர்

பேங்க் ஆஃப் பரோடா
Bank of Baroda

ஆரணி கிளை
நெ. 51 to 53, சத்தியமூர்த்தி சாலை, 111A, பிக் பஜார் தெரு, ஆரணி - 632 301.
போன் : 04173-227633. Email: arani@bankofbaroda.co.in

(bankNet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செயற்திறன்களில் வெளியிடப்படும் கருக்கமான விற்பனை அறிவிப்பு)

அரசால் சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-யின்படி (விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)
2002-ம் ஆண்டு கடன்பட்டோர் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அரசையார் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கவனிக்கை செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிறுவனத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் பெயர்கள் மற்றும் முகவரி : M/s. SPS Oil Mill, பிரதிநிதியான உரிமையாளர் திருமதி **K.**ரேக்கா, **SF No. 12/3A & 12/1,** விலைமாரிராமம், ஆற்காடு தாலுக்கா, இராணிபேட்டை மாவட்டம்-632521. மற்றும் திருமதி **K.**ரேக்கா, **(M/s.**உரிமை **SPS Oil Mill)** தெ. 52/A, ஆற்காடு சாலை, விளாப்பாக்கம், ஆற்காடு தாலுகா, வேலூர்-632521 மற்றும் திரு. **R.**காரிவேன், (ஜாமீன் தாரர்) தெ. 52/A, ஆற்காடு சாலை, விளாப்பாக்கம், ஆற்காடு தாலுக்கா, வேலூர்-632521 மற்றும் திரு **P.**சேஷு, (ஜாமீன் தாரர்) தெ. 52/A, ஆற்காடு சாலை, விளாப்பாக்கம், ஆற்காடு தாலுக்கா, வேலூர்-632521 மற்றும் திரு **P.**இளநாதன், (ஜாமீன் தாரர்) தெ. 52/A, ஆற்காடு சாலை, விளாப்பாக்கம், ஆற்காடு தாலுக்கா, வேலூர் - 632521.

Term-Loan A/c.No.**51200600014276,** நிறுவன தொகை ரூ.**3,78,26,794.46/-** மேலும் **28.02.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
28.02.2026 அன்று மொத்த நிறுவனத் தொகை ரூ.3,78,26,794.46/-

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் விலைங்கங்கள் இருப்பின்

சொத்து 1: வேலூர் மாவட்டம், அரக்கோணம் பதிவு மாவட்டம், ஆற்காடு சார்பதிவு அலுவலகம், விளாப்பாக்கம் கிராமம், இலட்சுமிபுரத்தில் புஞ்சை சர்வே நெ. 735/1 மற்றும் சர்வே நெ. 735/2, மானாவாரி பட்டா துணை பிரிவின் படி சர்வே எண். 735/18 என பிரிக்கப்பட்டுள்ளது. இடத்தின் அளவு கிழக்கில் இருந்து மேற்காக இரண்டு பக்கமும் 16 அடி, வடக்கில் குறுகு தெற்காக இரண்டு பக்கமும் 196 அடி. இதன் மொத்த பரப்பளவு 3136 சதுரஅடி. இந்த சொத்தானது திரு. P.சுரேஷ் பெயரில் உள்ளது. **நான்கு எல்லைகள்:** வடக்கு - 10 அடி பொதுப் பாதை, தெற்கு - சர்வே நெ. 735/3, கிழக்கு - தெகநாதனின் சொத்து, மேற்கு - நீக்கண்டனின் சொத்து.

திரணமிக்கப்பட்ட விலை	ரூ. 37,00,000/-	டேவணித் தொகை	ரூ. 3,70,000/-	ஏல உயர்வு தொகை	ரூ. 25,000/-

சொத்து 2: இராணிப்பேட்டை மாவட்டம், இராணிப்பேட்டை பதிவு மாவட்டம், ஆற்காடு தாலுக்கா, ஆற்காடு சார்பதிவு, விலைமாரிராமம், சர்வே நெ. 12/1, குத்தகை உரிமைகளுடன் நிலம் மற்றும் கட்டிடம்.

பொருள் 1: சர்வே நெ. 12/1, மொத்தப் பரப்பளவில் ஏக்கர் 0.09 சென்ட் ஏக்கர் 1.53 சென்ட் அல்லது ஹேக்டர் 0.62.0 ஏர்ஸ் பரப்பளவு. **நான்கு எல்லைகள்:** கிழக்கு - சர்வே நெ. 12/2A (பாட்டை), மேற்கு - சர்வே நெ. 12/1ல் M.தன்பாபாண் மற்றும் D.விஜயமுமார் அவர்களுக்கு சொந்தமான மீதமுள்ள நிலம். வடக்கு - சாத்தூர் கிராமத்தின் எல்லை. தெற்கு - சர்வே நெ. 12/2B (சாலை).

பொருள் 2: சர்வே நெ. 12/3A - ஏக்கர் 3.21 சென்ட் அல்லது ஹேக்டர் 1.30.0 ஏர்ஸ் பரப்பளவு. **நான்கு எல்லைகள்:** கிழக்கு - சர்வே நெ. 206/1A1, 206/1A2, 206/1B1, 206/2, மற்றும் 206/3A, மேற்கு - 25 அடி சாலையின் சர்வே நெ. 12/2A (பாட்டை). வடக்கு - சாத்தூர் கிராமத்தின் எல்லை. தெற்கு - சர்வே நெ. 12/2Bயில் உள்ள 40 அடி சாலை. மேலே உள்ள பொருள் 1 மற்றும் 2ன் மொத்த ஏக்கர் 3.30 சென்ட் பரப்பளவைக் கொண்டது. இந்த சொத்தானது திரு. P.சுரேஷ் மற்றும் திரு. P.தெகநாதன் ஆகியோரின் பெயரில் உள்ளது. **சுவாதீன நிலை : ஆக்கபூர்வ நிலை**

திரணமிக்கப்பட்ட விலை	ரூ. 3,00,00,000/-	டேவணித் தொகை	ரூ. 30,00,000/-	ஏல உயர்வு தொகை	ரூ. 1,00,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் 07.04.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 25.03.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 07.04.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://www.bankofbaroda.bank.in/e-auction என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி போன்: 0417 3-227633 எண்: 9515024578 & 9677075502 தொடர்பு கொள்ளலாம்.
தேதி : 13.03.2026 **அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/**
இடம் : ஆரணி **பேங்க் ஆஃப் பரோடா**